எழுதுவதில்லை. ரெட்டியார் என்றுதான் எழுதுவார்கள். ஆகவே, அது குறித்து, தாசில்தார் அவர்கள் பரிந்துரை செய்த பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்குரிய குழுவை நியமித்து, அதை ஆராய்ந்தறிய அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, அதிலே சங்கடமே ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் மூன்று விதமான தன்மையிலே ஆதாரங்கள் தரலாம். ஒன்று, பத்திரங்கள் இருந்தால் தரலாம்; அல்லது சொந்தக்காரர்கள் பத்திரங்கள் இருந்தால் தரலாம். இல்லாவிட்டால், இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு மனுதாரர்/பெற்றோர்/பாதுகாவலர்களால் இரண்டு மதிக்கத் தகுந்த சாட்சியங்களுடன் பத்திரக் காகிதத்தில் கொடுக்கப்படும் ஒரு ஆணை உறுதிப் பத்திரம் மூலமாகச் சான்றுகளை வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*வினா எண் 362. திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கம்மவார் நாயுடு சமூகத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் தம்மையும் சேர்த்துக்கொள்ளக் கோரி வந்துள்ள கோரிக்கைகளில் கம்மவார் நாயுடு சமூகத்தினரிடமிருந்து வந்துள்ள கோரிக்கையும் அடங்கும். பிறவற்றுடன் இதனையும் ஆய்வு செய்து வரப்படுகிறது.

திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கம்மவார் என்ற சமூகத்தினர் கோவை மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும் குறிப்பிட்ட பகுதியினரே உள்ளனர். அதிலும் அந்தச் சமூகத்திலே ஐந்து சதவீதத்தினர்தான் பணக்காரர்களாக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக, இந்தச் சமூகத்தினரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். அதைச் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே இதுபோன்று 27 வகுப்பினர் தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மனுக்கள் தந்திருக்கிறார்கள். இதுபற்றியெல்லாம் ஆராய்வதற்காகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினுடைய இயக்குநர்

அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஆராயக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு நீண்ட நெடுங் காலமாக வைத்திருப்பது, அவர்கள், ஜாதியிலே மிக, மிகப் பின்தங்கியவர் களாகக் கருதப்பட்டு, பொருளாதாரத் துறையிலும், பின்தங்கியவராகக் கருதப் பட்டு, கல்வி வசதி பெற முடியாமல் தவிக்கிறவர்கள் என்ற அடிப்படைக் குறிப்புகள் அத்தனையும் பார்த்து, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில், வெள்ளைக்காரர்கள் காலத்திலிருந்து சேர்க்கப்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் 27 வகுப்பினர்கள் தங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலே கம்மவார் நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள் அடங்குவார்கள். இதுபற்றி முழு விவரக் குறிப்புகளை ஆங்காங்கு மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வினை மேலும் சிறப்பாக நடத்துவதற்கும் ஆங்காங்கு பரிசீலனை செய் வதற்கும் இதற்குத் தனிப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று பிற் பட்டோர் நலத் துறை இயக்குநர் கேட்டிருக்கிறார். அரசு அதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்த விசாரணையால் மட்டுமல்ல, 1981 வது ஆண்டு எடுத்த சென்சஸ் கணக்குகளும் அதுபற்றிய முழு விவரங்களும் முழு வதும் வரவில்லை. வந்ததற்குப் பிறகு, பொருளாதார நிலை, கல்வி நிலை, மற்றைய சமூகச் சூழ்நிலை, ஆகியவற்றின் குறிப்புகளை அடிப்படையாக வைத்து, தக்க முடிவுகள் எடுக்கலாம்.

திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி அடிப்படையிலாவது, கல்வி வசதி கொடுப்பதற்காவது, இந்தச் சமூகத்தினருக்கு முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர் களே, நான் முதலிலேயே கூறியபடி இந்த விண்ணப்பம் உட்பட 27 வகுப்பினர் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிலேயேதான் நான் சொன் னேன், கல்வியில் பின்தங்கியவர்களாக இருந்தாலும், பொருளாதாரத் துறை யிலும் பின்தங்கியவர்களாக இருந்து, சமூக அமைப்பிலும் அப்படி இருக்கி றார்கள் என்பதைக் கண்டறிந்து, எந்த அளவிற்குச் சேர்க்க முடியும், யாரைச் சேர்க்க முடியும் என்பதைப்பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை இயக்குநர் அறிக்கை வந்த பிறகு, அரசு தக்க முடிவை எடுக்கும்.

[1982 மார்ச் 5

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர்கள் என்ற சமூகம் பிற் படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டும் அவர்கள் எந்தவிதமான சலுகையும் அடைய முடியாமல் இருக்கிறார்கள். அந்தச் சமூகத்தைத் தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர் சமூகத்தில் சேர்த்து, அவர்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட சதவீதம் சலுகைகளை ஒதுக்கித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு சமூகத்தினரை தாழ்த்தப்பட்ட வகுப்பினராகவோ அல்லது பழங்குடி மக்கள் பட்டியலிலோ சேர்க்க வேண்டும் என்றால் மத்திய அரசுதான் சேர்க்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாநில அரசு அறிந்து ஆராய்ந்து சேர்க்க உரிமை பெற்றிருக்கிறது. மத்திய அரசுக்கு இப்படிப் பல்வேறு கோரிக்கைகள் போயிருக்கின்றன. அதற்காக ஒரு குழு கூட மத்திய அரசு அமைத்து, அது எல்லா மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் செய்து, மத்திய அரசுக்கு அறிக்கை அளிக்கின்ற நிலையில் இருக்கிறார்கள். அதைப் பற்றி மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள கிறித்துவர்கள் அத்தனை பேர்களும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இருந்தாலும்கூட, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. சர்ட்டிபி கேட்டில் ரோமன் கத்தோலிக், லாட்டின் கத்தோலிக் என்று எழுதப்பட்டிருக் கிறது. அதிலே ரோமன் கத்தோலிக் பார்வார்டு என்றும் லாட்டின் கத்தோலிக் பேக்வர்டு என்றும் சொல்லப்படுகிறது. இத்தகைய தவறைத் திருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றி குறிப்புகள் இல்லை. அதுபற்றி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர், நான் முதலிலே கூறியபடி, ஆய்வு நடத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த ஆய்விலே உண்மைகள் வெளிப்படுமானால் அதைப் பொறுத்து அரசு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS